உண்மைகளை தெரிந்துகொள்ளுங்கள்:

# உடல்நல அவசர உதவிக்காக 911 ஐ அழைக்கும்போது என்ன நடக்கும்

*தற்காலிக மற்றும் வெளிநாட்டு வேலையாட்களுக்கு*

## உங்களுக்கு ஒரு அவசர நிலை ஏற்பட்டால், 911 ஐ உடனடியாக அழையுங்கள்.

**911 அழைப்பின் போது: உதவியைப் பெற்றுக்கொள்ள கேள்விகளுக்கு பதிலளியுங்கள்.**

- 911 இல் பேசுபவர் கேட்கும் கேள்வி: “911 – போலீஸா, தீயணைப்பா அல்லது அம்புலன்ஸா?” உடல் நல அவசரநிலைக்கு “அம்புலன்ஸ்” என்று சொல்லுங்கள். உங்கள் ஃபோன் லைனை அம்புலன்ஸை அனுப்புபவரிடம் கொடுப்பார்கள். தொடர்பை துண்டித்துவிட வேண்டாம்.
- 911 அம்புலன்ஸை அனுப்புகிறவர் உங்களுக்கு உதவிசெய்வதற்காக கேள்விகள் கேட்பார். உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவை என்றால் நீங்கள் பேசும் மொழியை சொல்லுங்கள். உங்களை ஒரு மொழிபெயர்ப்பாளருடன் தொடர்புபடுத்துவார்கள். தொடர்பை துண்டித்துவிட வேண்டாம்.

**911 அம்புலன்ஸ் பணியாளர் அவசர நிலையை புரிந்துகொள்ளவும் உங்கள் இடத்தை தெரிந்துகொள்ளவும் கேள்விகள் கேட்பார்:**

- என்ன மருத்துவ உதவி தேவை?
- அவசர நிலை எந்த விலாசத்தில் ஏற்பட்டது (நகரம், டவுன், வீதி, வீடு அல்லது வதிவிட இலக்கம்)?
- நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் (வெட்டவெளி, கபின், கொட்டகை, பன்க் வீடு)?
- உங்கள் தொலைபேசி/செல்ஃபோன் இலக்கம் என்ன?
- உங்களுக்கு மொழிபெயர்ப்பாளர் தேவையா? ஆம் என்றால், நீங்கள் எந்த மொழியில் பேசுவீர்கள்?

உங்கள் பதில்கள் எந்த உதவியை அனுப்புவது என முடிவுசெய்ய உங்களுடன் பேசுகிறவருக்கு உதவும்.

உதவி வந்து சேரும்வரை அவர்களின் அறிவுரையை பின்பற்றுங்கள்.

**911 அழைப்பிற்கு பின்: பாதுகாப்பான இடமாயிருந்தால் அங்கேயே இருங்கள்**

- பாராமெடிக்ஸை (துணைமருத்துவர்) கொண்ட அம்புலன்ஸ் ஒன்று உங்களுக்கு உதவுவதற்காக வந்துகொண்டிருக்கிறது. நீங்கள் இருக்கும் இடம் பாதுகாப்பானதாக இருந்தால் அந்த இடத்தைவிட்டு போய்விட வேண்டாம்.
- நீங்கள் மற்றொருவருக்காக அழைத்திருந்தீர்கள் என்றால், பாராமெடிக்ஸ் வந்ததும் அவர்களை சந்தித்து, அந்த நபரிடம் அவர்களை அழைத்துச் செல்லுங்கள்.
- பாராமெடிக்ஸ் முழுமையான மருத்துவ பரிசோதனை செய்வார்கள். அவர்கள் சிகிச்சை ஏதும் செய்யலாம், பின்பு நோயாளியை மருத்துவ மனைக்கோ உடல்நல பராமரிப்பு நிலையத்துக்கோ அழைத்துசெல்வார்கள்.

**அவசர நிலைமை நீங்கள் வேலை செய்யும் இடத்தில் ஏற்பட்டால், 911 ஐ அழையுங்கள், பின்பு பின்வரும் தகவல்களை உபயோகியுங்கள்:**

**விலாசம்:** ______________________

______________________

______________________

**குறுக்குச் சந்தி (இன்டர்செக்சன்):**

______________________

**மற்றும்** ______________________

**நான் பேசும் மொழி:**

______________________

Ontario